இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்புத்திட்டம் - மட்டம் 6

இறுதிப் பரீட்சை -2017/2018

**LWU 4321/LLU6813 – சட்டவியல்**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 22-02-2020 நேரம் : பி.ப 1.30 - பி.ப 4.30

நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. (அ). "அர்த்தமுள்ள வகையில் இறைமையுள்ள ஒரு நபர் அல்லது அமைப்பு நிட்சயமாக வேறு ஏதேனும் இறைமைக்கு உட்பட்டவர் அல்ல என்பது ஒஸ்ரினுடைய கருத்தில் தெளிவாக புலனாகிறது. எவ்வாறாயினும் இத்தகைய எதிர்மறையான குறியை சேர்த்துக் கொள்வதானது பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் கூட அரசியல் யதார்த்தங்களின் பின்னணியில் ஒரு தேவைக்கு மேலதிகமான மட்டுப்பாடாக இருந்தது என வாதிடப்படுவதோடு, இருபதாம் மற்றும் இருபத்தொறாம் நூற்றாண்டில் மிகவும் கூடியது எனலாம்."

   McCoubrey & White's Textbook on Jurisprudence, (2008) 5th ed.p44

   சமகால அரசியலமைப்பு அரசியல், மற்றும் சமூக பிரச்சினைகள் ஒஸ்ரினுடைய இறைமை பற்றிய சம்பிரதாயபூர்வமான விளக்கத்தில் ஒரு சவாலை ஏற்படுத்தியுள்ளது என நீர் கருதுகிறீரா?

   குறைந்தது மூன்று நியாயதிக்கங்களில் இருந்து பெறப்பட்ட உதாரணங்களைக் காட்டி உமது விடையை ஆதாரப்படுத்துக.

   (ஆ). பின்வருவனவற்றில் எவை புலனரிவாத சட்டத்திற்குள் உள்வாங்கப்படும். உமது நிலைப்பாட்டுக்குரிய நியாயப்படுத்துகையை தருக.

   (15 புள்ளிகள்)

   (i) கண்டியானா மாநகர சபையின் உப சட்டவாக்கம், 15 வயதுக்கு கீழ்ப்பட்ட பிள்ளைகள் வயது வந்த ஒருவருடனோ அல்லது அல்லாமலோ திரையரங்குகளில் அனுமதிக்கப்படலாகாது என்ற ஒரு நிபந்தனையை விதிக்கிறது.

   (ii) வழக்காறு சட்டம்

   **(05X2 =10** புள்ளிகள்)

2. சட்ட விதிகளின் உள்ளடக்கத்தையும், சட்ட நியதிச் சட்டங்களையும் மதிப்பிடுவதற்கு இயற்கை சட்டவாதம் எவ்வாறு சட்டவியலாளர்களின் கைகளுக்கு ஒரு வலுமிக்க கருவியாக வந்தது என்பதை பகுப்பாய்வு செய்க.

உமது கருத்தின் படி சட்டமுறைமைகளை வார்ப்பதில் இயற்கை சட்டவாதத்தில் இருந்து பெறப்பட்ட மிகவும் ஆழமான தாக்கம் என்ன?

இயைபான அதிகாரங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக

(25 புள்ளிகள்)

3. திரு ரொனால்ட் 1970 ஆம் ஆண்டு தென் இரானிய அரசியலமைப்பின் கீழ் 2015ஆம் ஆண்டு பெப்ரவரியில் தென் இரானியாவின் ஜனாதிபதியாக ஐந்து ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டார். தென் இரானியா அடுத்து வரும் தேர்தலுக்கு தயாராகின்ற வேளையில், 2019 ஆம் ஆண்டு டிசம்பரில் ஜனாதிபதி 1970 ஆம் ஆண்டின் அரசியலமைப்பபை முற்றிலும் தவிர்த்து அனைத்து அரச அதிகாரங்களையும் தன் வசமாக்கியதோடு சட்டவாக்க சபையை கலைத்து புதிய அரசியலமைப்பு ஒன்றை பிரகடனம் செய்தார். அதேவேளை எதிர்கட்சியானது 1970 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் புதிய அரசியலமைப்பின் சட்டபூர்வதன்மை பற்றி தென் இரானியாவின் உயர் நீதிமன்றத்திலிருந்து ஆலோசனையைக் கோரினர். தென் இரானியாவின் அரச ஊடகம் ஒன்று ஆட்சிக்கவிழ்ப்பு வெற்றிகரமாக அமைந்தது, புதிய அரசியலமைப்பு சட்ட ரீதியாக வலிதானது மற்றும் புரட்சியின் விளைவாக ஏலவேயிருந்த அரசியமைப்பு வலிதற்றதானதுடன் சட்டத்தின் ஒரு பாகமாக அமையாது என அறிக்கையிட்டது. திரு ரொனால்ட் புதிய அரசியலமைப்பிற்கு எதிராக மக்கள் மத்தியில் எந்த எதிர்ப்பும் இல்லை எனவும் இந்த அரசியல் அமைப்பை நாட்டின் உயரிய சட்டமாக அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என குறிப்பிட்டு ஊடகத்தில் ஒரு அறிக்கையை வழங்கினார்.

கெல்சனுடைய கோட்பாட்டின் பின்னணியில் தென் இராணியாவின் நிலைமையை பகுப்பாய்வு செய்க.

உமது விடையை இயைபான சட்ட அதிகாரங்களுடன் விளக்குக.

(25 புள்ளிகள்)

4. “வரலாற்றுசார் சட்டவியல் கொள்கைகளின் படி சட்டமானது மக்களுடைய உணர்வில் அமைந்திருக்கிறது என்பது அடிப்படையான நம்பிக்கையாகும். அவர்கள் வழக்காறை ஆட்சி செலுத்தும் சட்ட மூலமாக கருதினர். இந்த பகுப்பாய்வு அதற்கே உரிய பிரச்சனைகளுடன் இல்லாமல் இல்லை”

வரலாற்றுசார் சட்டவியல் கொள்கைக்கு எதிராக உருவாக்கப்பட்ட பிரதான விமர்சனங்கள் என்ன? உமது விடைக்குரிய காரணங்களை தருக.

(25 புள்ளிகள்)

5. “பொருளாதார தளம் மற்றும் சட்டம் என்பவற்றுக்கிடையான உறவை மேல் கட்டுமான கருவி என ஒரு வகையில் நோக்குவது முதன்மை கருத்தாக அமையும். இலகுவாக எடுத்துக்கூறினால், இந்த கருத்துக்கு அமைய சட்டம் என்பது அதிகார வர்க்கத்தினால் பாட்டாளி வர்க்கத்தை ஒடுக்குதல் மற்றும் மேலாதிக்கம் செய்வதற்கு ஒரு வழி வகையாக அமைகிறது.”

McCoubrey & White's Textbook on Jurisprudence, (2008) 5th ed.,p205

இந்த மாக்சிய நிலைப்பாடு நிகழ்கால சட்டமுறைமைகளின் உண்மையான தோற்றப்பாட்டை பிரதிபலிக்கின்றதா?

உமது விடைக்குரிய காரணங்களை தருக.

(25 புள்ளிகள்)

6. "ஸ்கண்டினேவிய மெய்யியல்சார்வாத கொள்கையில் மிக முக்கியமான கரிசனை யாதெனில் சட்டமானது எவ்வாறு மக்களுடைய நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதாகும். அவர்கள் சட்டத்தின் வலு, பாரம்பரிய விளக்கங்களில் பொதிந்துள்ள மனோதத்துவத்தில் இருந்து விலகி நிற்கும் கூற்றினை விஞ்ஞான பூர்வமாக விளக்க முற்படுகின்றனர்"

Suri Ratnapala, Jurisprudence (2009), p109

நவீன சமூக அமைப்பில் ஸ்கண்டினேவிய மெய்யியல்சார்வாதத்தின் முக்கியமான அம்சங்களுடைய பொருத்தப்பாட்டை விமர்சித்து மதிப்பிடுக.

(25 புள்ளிகள் )

7. அமெரிக்க மெய்யியல்வாத இயக்கத்தின் தத்துவியல் அடிப்படைகளை ஆராய்வதோடு இலங்கை சட்ட முறைமையின் உண்மையான இயல்பை விளங்கிக் கொள்வதற்கு இந்த இயக்கம் எந்தளவிற்கு பகுத்தறிவை வழங்குகின்றது என்பதை விளக்குக.

(25 புள்ளிகள் )

8. சமகால சமூக , பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பில் ஏற்படுகின்ற பிணக்குகளை சமரசப்படுத்துவதில் சட்டவியலாளர்கள் மற்றும் சட்டவாக்குனர்களின் பணிகளை பற்றி Pound வழங்கிய விளக்கத்திற்கு அவதானம் வழங்கி Pound உடைய கொள்கையின் முக்கியமான அம்சங்களின் இயைபுடைமையை பகுப்பாய்வு செய்க.

(25 புள்ளிகள் )

பதிப்புரிமை பெற்றது